செய்தி வெளியீடு எண்:594 நாள்:15.12.2016

## செய்தி வெளியீடு

'வர்தா' புயல் கடந்த 12.12.2016 அன்று சென்னை அருகே கரையை கடந்தது. இதன் காரணமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் மரங்கள், மின்கம்பங்கள் சாய்ந்து பலத்த சேதங்கள் ஏற்பட்டன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் 12.12.2016 அன்று `வர்தா' புயல் காரணமாக பாதிக்கப்பட்டு சென்னை எண்ணூர் கத்திவாக்கம் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்ட மக்களையும், 13.12.2016 அன்று திருவள்ளூர் மாவட்டம், மாத்தூர் அரசு உயர் நிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்ட மக்களையும், பொன்னேரி தீபம் கல்யாண மண்டபத்தில் உள்ள நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்ட மக்களையும் நேரில் சந்தித்து ஆறுதல் கூறி நிவாரண உதவிகளை வழங்கினார்.

'வர்தா' புயல் காரணமாக காஞ்சிபுரம் மாவட்டம், வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் ஏற்பட்ட சேதங்களை 14.12.2016 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர், மாம்பாக்கத்தில் நடைபெற்று வரும் மின்மாற்றி மற்றும் மின்பாதை சீரமைப்புப் பணிகளைப் பார்வையிட்டு, மாமல்லபுரம் பேரூராட்சி அலுவலகத்தில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் இன்று (15.12.2016) சென்னை, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, சி.பி. ராமசாமி சாலை, செயின்ட் மேரீஸ் சாலை, சேமியர்ஸ் சாலை, டர்ன்புல்ஸ் சாலை, ஆர்ச் பிஷப் மாதியாஸ் அவென்யூ ஆகிய இடங்களுக்கு நேரில் சென்று 'வர்தா' புயல் காரணமாக சாலையில் வீழ்ந்து கிடக்கும் மரங்கள் அப்புறப்படுத்தப்படும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அங்கு பணியில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்களுக்கு ரொட்டி, குடி தண்ணீர் ஆகியவற்றை வழங்கியதுடன், அவர்களது பணியைப் பாராட்டி அவர்களை ஊக்கப்படுத்தினார்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 15.12.2016.